


33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca www.tamilvanakkam.com




நதி: 33 பாலம்: 05 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் MARCH 01, 2023

# கனடிய மத்திய அரசின் சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டம்

கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கனடிய மாகாண அரசின் முதல்வர்கள் மற்றும் பிராந்திய அரசின் முதல்வர்களை ஒட்டாவா நகரில் 2023 பெப்பிரவரி 7ஆம் திகதி சந்தித்தபோது கனடிய மத்திய அரசின் பத்து வருடகால சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டத்தை முன்மொழிந்தார்.

மாகாணங்களுக்கும் மத்திய அரசாங்கத் திற்கும் இடையே சுகாதாரப் பாதுகாப்பு நிதிப் பங்கீடு எப்போதும் ஒரு சர்ச்சைக்குரிய விவாதமாகவே இருக்கிறது. இவ்வாறு ஏற்கனவே விவாதத்திற்குரிய விடயமாக இருந்த சுகாதார பாதுகாப்பு நிதிப்பங்கீட்டை, பெரும்தொற்று நோய்கால சுகாதாரச்செலவுகள் ஒரு புதிய நிதி ஒப்பந்தம் செய்யவேண்டியதை அவசர மாக்கியிருந்தன.

மாகாண அரசுகளின் கோரிக்கைகளில் மிக முக்கியமானது தற்போது மாகாண அரசுகளின் சுகாதார பாதுகாப்புச் செலவினங்களில் 22%ஐ மட்டுமே மத்திய அரசு சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டம் மூலம் பணமாக வழங்குகிறது. மத்திய அரசு வழங்கும் இந்தப்பண உதவியை 22%இல் இருந்து 35%ஆக உயர்த்த வேண்டும் என்பதாகும். ஆனால், மத்திய அரசு மாகாண அரசுகளின் சுகாதார பாதுகாப்பு செலவினங்களுக்கு உதவ 1977ஆம் ஆண்டில் இருந்து மத்திய அரசின் வருமான வரி வீதத்தைக் குறைத்து மாகாண அரசுகளின் வருமான வரி வீதத்தைக் கூட்டியது. இவ்வாறு மாகாண அரசுகளுக்கு வழங்கிய மேலதிக வரி வீதத்தைக் கணக்கில் எடுத்தால் மாகாண அரசுகளின் சுகாதார பாதுகாப்புச் செலவினங்களில் 38%ஐ மத்திய அரசு வழங்குகிறது என மத்திய அரசு கூறுகிறது.

மாகாண அரசுகளின் சுகாதார பாதுகாப்புச் செலவினங்களில் 22%த்தையா அல்லது 38%த்தையா மத்திய அரசு வழங்குகிறது என்ற சர்ச்சையைவிட மேலதிகமாகப் பண உதவி மத்திய அரசு வழங்க வேண்டுமானால் அப்பண உதவி சில குறிப்பிடப்பட்ட சுகாதார சேவைகளுக்குப் பாவிக்கப்பட வேண்டும் என்ற




நிபந்தனையை மாகாண அரசுகள் மீது விதிக்கப் போவதாகக் கூறுவது, மாகாண அரசுகளுக்கு மிகவும் அதிருப்தியை கொடுத்துள்ளது. சுகாதார பாதுகாப்பு வழங்குவது ஒரு மாகாணத்தின் கட்டுப் பாட்டுக்கு உட்பட்ட விடயம். இதில் மத்திய அரசு தலையிட முடியாது எனக் கூறி மத்திய அரசு வழங்கும் நிபந்தனைகளை மாகாண அரசுகள் இதுவரை தீவிரமாக எதிர்த்து வந்தன. இவ்வாறான நிலையிலேயே மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களினதும் முதல்வர்கள் கனடியப் பிரதமரை ஒட்டாவாவில் சந்திக்க முன்வந்தனர்.

பெப்பிரவரி 7ஆம் திகதி ஒட்டாவா நகரில் நடைபெற்ற முதல்வர்களுடனான சந்திப்பில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ மாகாணங்களுக்கும் மற்றும் பிரதேசங் களுக்கும் மத்திய அரசு வழங்கும் சுகாதார பாதுகாப்பு நிதியை அடுத்த பத்து ஆண்டுகளில் $196.1 பில்லியனால் அதிகரிக்கப்படும் எனக் கூறினார். இது மத்திய அரசு ஏற்கனவே அதிகரிக்கப் போவதாகக் கூறியதைவிட $46.2 பில்லியன் அதிக அளவு புதிய நிதியுதவித் திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த அதிகரிக்கப்பட்ட $46.2 பில்லியனிலும் பின்வரும் 5 விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

* மாகாண மற்றும் பிரதேச அரசுகளின் குழந்தைகளைப் பராமரிக்கும் மருத்துவ மனைகள், அவசரசேவை நடைபெறும் அறைகள் (Emergency Rooms) மற்றும் அறுவை சிகிச்சைகளுக்காக நீண்ட நாட்கள் காத்திருத்தல் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை நிவர்த்தி செய்ய மத்திய அரசு எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் உடனடியாக $2 பில்லியனை வழங்க முன்வந்துள்ளது. இது மத்திய அரசு பெருந்தொற்று நோய்ப்பரவல் காலத்தில் மாகாண மற்றும் பிரதேச அரசுகளுக்கு வழங்கிய $6.5 பில்லியனைவிட மேலதிகமாக வழங்கப் படும் உதவியாகும்.

* மாகாண மற்றும் பிரதேச அரசுகளின் சுகாதாரச் செலவுகளுக்கு மத்திய அரசு சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டம் மூலம் வழங்கப்படும் பண உதவி அடுத்த 5 ஆண்டுகளுக்கு 5% அதிகரிப்பை வருடாந்தம் வழங்க மத்திய அரசு உறுதி அளித்தது. இதன்மூலம் அடுத்த பத்து ஆண்டுகளில் $17.3 பில்லியன் மத்திய அரசால் மேலதிகமாக வழங்கப்படும். முதலில் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் தேவைகளுக்கு ஏற்பவே 5 ஆண்டுகளுக்கு இந்த 5% அதிகரிப்பு வழங்கப்படும். அதன்பின்னர் 5 ஆண்டுகளின் முடிவில் ஒரு நிரந்தர நிதி அதிகரிப்பு உறுதி செய்யப்படும். மத்திய

தொடர்ச்சி 04 பக்கம்

































MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs



AYNGKARAN SIVANANTHAM
Business Development Manager
Mobile: (647) 670-0320
Email: ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital

8T Capital
Mortgage Administration # 13073

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# கனடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசின் இந்த உத்தரவாதத்தால் மத்திய அரசின் சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 33% அதிகரிப்பையும், பின்னர் பத்து ஆண்டுகளில் 61%இற்கு அதிகரிக்கப் படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



Ontario Premier Doug Ford during a press conference in Ottawa

* மேலே கூறப்பட்ட இரண்டுவிதமான மத்திய அரசின் உதவிகளும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் மத்திய அரசால் மாகாண மற்றும் பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்பட்டவையாகும். இதைவிட மத்திய அரசு மேலதிகமாக அடுத்த பத்து ஆண்டுகளில் மாகாண மற்றும் பிராந்திய அரசுகளுக்கு நிபந்தனையுடன் $25 பில்லியனை வழங்க முன்வந்துள்ளது. மாகாணம் மற்றும் பிரதேசங்களில் உள்ள மக்களின் சுகாதார சேவைகளில் பின்வரும் நான்கு விடயங்களிலும் மாகாண மற்றும் பிரதேச அரசுகள் குறிப்பாக முதலிட இப்பண உதவி வழங்கப்படுகிறது.
1. குடும்ப சுகாதாரசேவை, 2. சுகாதார ஊழியர் 3. மனநல ஆரோக்கியம் மற்றும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானோரை மீட்டெடுத்தல். 4. சுகாதார சேவையை நவீனமயப்படுத்தல்
மாகாண மற்றும் பிரதேச அரசுகள் இந்த நான்கு சுகாதார சேவைகளிலும் முதலிடு வதற்கான உறுதியளிப்பைச் செய்வதன் மூலமே மத்திய அரசு இந்தப் பண உதவியை வழங்கும். இந்தப் பணஉதவி ஏற்கனவே மத்திய அரசு மனநல ஆரோக்கியம், போதைப் பொருட்களுக்கு அடிமையானோரை அதில் இருந்து மீட்டெடுத்தல், நீண்ட கால சுகாதார பராமரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற வற்றிற்கு முதலிட நிபந்தனையுடன் மாகாண மற்றும் பிரதேச அரசுகளுக்கு வழங்கிய $7.8 பில்லியன் பண உதவியை விட மேலதிகமாக வழங்கப்படுவது ஆகும்.

* மேலதிக தனிப்பட்ட ஆதரவுத் தொழிலாளர்களை (PSW) வேலைக்கு அமர்த்தவும், தற்போதைய தனிப்பட்ட ஆதரவுத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கவுமென மாகாண மற்றும் பிரதேச அரசுகளிற்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் $1.7 பில்லியனை மத்திய அரசு வழங்குகிறது.

* பிரதேச அரசுகளில் சுகாதார பராமரிப்பிற்கு மேலதிக பயணச் செலவுகள் ஏற்படுவதால் அப்பிராந்திய அரசுகளுக்கு சுகாதார பராமரிப்புச் சேவையின்போது ஏற்படும் பயணச் செலவுகளை நிவர்த்தி செய்ய மத்திய அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $175 மில்லியனை ஒதுக்கியுள்ளது.



Justin Trudeau meeting with Canada's premiers in Ottawa

கனடியப் பிரதமரால் முதல்வர்களுடனான சந்திப்பில் உறுதியளிக்கப்பட்ட மேற்கூறிய $46.2 பில்லியன் மேலதிக உதவித் திட்டங்களைவிட, மேலதிகமாக கனடிய முதற்குடிமக்களின் சுகாதார சேவை களைப் பராமரிக்கக் கனடிய முதற்குடி மக்களின் அமைப்புகளுக்கு அடுத்த பத்து ஆண்டுகளுக்கு $2 பில்லியன் வழங்கப் படும் எனவும் கனடியப் பிரதமர் உறுதி அளித்துள்ளார். இது கிராமப்புற மற்றும் தொலை தூரங்களில் வாழும் பின்தங்கிய முதற்குடி சமூகங்களின் குடும்ப சுகாதார சேவைகளைக் கவனிக்க முதலிடப்படும். இது அவர்களுக்கு வீட்டுப் பராமரிப்பு மற்றும் நீண்டகால சுகாதார பராமரிப்புகள் வழங்க உதவும்.

கனடியப் பிரதமரின் பத்து வருட கால சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டத்தைப் பற்றி முதல்வர்கள் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் இத்திட்டம் தங்களுக்குத் திருப்தி அளிக்கா விட்டாலும், மத்திய அரசு மேலதிக பணஉதவி வழங்க முன் வந்துள்ளதை ஏற்றுக் கொள்வதாகக் கூறினர்.

மத்திய அரசு வழங்கும் புதிய மேலதிக பணத்தில் $25 பில்லியனை நான்கு குறிப்பிட்ட சுகாதார சேவைகளுக்கு மாகாண மற்றும் பிரதேச அரசுகள் ஒதுக்க வேண்டும். பின்னர் அவற்றின் செலவினங்களுக்கான விபரத்தை மத்திய அரசுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்த படியால், ஒவ்வொரு மாகாணங்களும் பிரதேசங்களும் மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து தனிப்பட்ட ஒப்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டிய தேவை யிருந்தது. இதனால் கனடியப் பிரதமரின் மாகாண மற்றும் பிரதேச முதல்வர் களுக்கான சந்திப்பின் பின்னர் மத்திய மாகாண அரசுகள் தனித்தனியாகக் கனடியப் பிரதமருடன் இருதரப்புக் கூட்டங்களை நடத்தின.

2023 பெப்பிரவரி 23இல் ஒன்றாறியோ மாகாண சுகாதார அமைச்சர் சில்வியா ஜோன்ஸ் ஒன்றாறியோ மாகாணம் கனடிய மத்திய அரசுடன் சுகாதாரச் செலவு களுக்கான ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டு விட்டதாக அறிவித்தார். கனடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் மத்திய அரசுடன் இந்தப் பத்து வருடகால சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையொப்பம் இட்ட முதலாவது மாகாணமாக ஒன்றாறியோ இருந்தது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம்மூலம் ஒன்றாறியோ மாகாணம் மத்திய அரசிடம் இருந்து உடனடியாக சுகாதாரச் செலவினங்களுக்கு மேலதிகமாக $776 மில்லியனையும், சுகாதாரச் செலவினங் களுக்கான திட்டங்களை வழங்குவதன் மூலம் மேலதிக பணமாக $8.4 பில்லியனையும் பெறுகிறது. இவ் ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்ட பின்னர் கனடிய மத்திய சுகாதார அமைச்சர் Jean - Yues Duclos விடுத்துள்ள அறிக்கையில் இந்த ஒப்பந்தம் ஒன்றாறியோ மாகாண அரசுடனான ஒத்துழைப்பைத் தொடரவும், சுகாதாரப் பணியாளர் மற்றும் அவர்களது பராமரிப்பில் உள்ளோருக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும் உதவும் என்றார். இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஒன்றாறியோ மாகாணம் தனது சுகாதார தரவுகள் சேகரிப்பதை மேம்படுத்தவும் மற்றும் அத்தரவுகளையும் எவ்வாறு சுகாதாரசேவை செயல்படுகிறது என்பதை யும் வருடாந்த அறிக்கை மூலம் மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கவும் ஒத்துக் கொண்டுள்ளது.

ஒன்றாறியோ மாகாணத்தைத் தொடர்ந்து நான்கு அட்லாண்டிக் பிரதேச மாகாணங்களாகிய: Prince Edward Island, Nova Scotia, Newfoundland and Labrador மற்றும் New Brunswick ஆகியவையும் மத்திய அரசுடன் சுகாதாரச் செலவுகளுக்கான ஒப்பந்தங் களை செய்ய முன்வந்துள்ளன.

கனடியப் பிரதமரின் பத்து வருட கால சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டத்தை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவரும் பழமைவாதக் கட்சியின்



Conservative Leader Pierre Poilievre

தலைவருமான Pierre Poilievre தமது அரசு பதவி ஏற்ற பின்னரும் தொடர்ந்தும் இச்சுகாதார பாதுகாப்புத் திட்டத்தை அமல்படுத்துவோம் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், லிபரல் அரசு தேவையற்ற விடயங்களில் வீணான செலவுகளைச் செய்திராவிட்டால் மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களுக்கு இன்னும் அதிகளவு பணஉதவியை சுகாதாரச் செலவினங்களுக்கு வழங்கி யிருக்கலாம் என்றார்.



புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Jagmeet Singh இந்தப் பத்து வருடகால சுகாதார பாதுகாப்பு நிதித்திட்டத்தை விமர்சித்துள்ளார். இது சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய ஒரு தீர்வையும் வழங்கவில்லை என்றும் தனியார் மயமாக்கப்பட்ட பராமரிப்பிற்கு நிதியளிக்க பொதுமக்களின் பணம் பயன்படுத்தப்படுவதை தடுக்க வில்லை என்றும் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், பழமைவாதக் கட்சித்தலைவர் இந்தத் திட்டத்தைப் பாராட்டியதில் தனக்கு ஆச்சரியம் ஏதும் இல்லை. ஏனென்றால், இது இலாப நோக்கோடு இயங்கும் தனியார் மயப்பட்ட பராமரிப்புகளுக்குப் பொதுப்பணத்தில் இருந்து நிதி வழங்க வகை செய்கிறது. இதை பழமைவாதக்கட்சி ஆதரிக்கிறது என்றார்.

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
Advanced function
Calculus & vectors
Data management
All Classes available in Scarborough & Stouffville
Contact: 647.340.9490 / 416.732.2228

Mr.S.F.Xavier (Teacher)

# போதி மரம்




அதிகாலையின் மங்கிய இருட்டில் பனிக்குளிரைக் கிழித்துக் கொண்டு அருகே உள்ள பௌத்த விஹாரையிலிருந்து ஒலிபெருக்கியில் ‘பிரித்’ ஓதும் சத்தம் அந்த இராணுவ மருத்துவமனைக்குள் எதிரொலித்தது.

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி..!

அந்த மருத்துவமனையில் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த பண்டா ‘நான் ஒரு நல்ல பௌத்தனா?’ என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

‘இல்லை’ என்ற அவனது மனச்சாட்சியின் பதில் அவன் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

‘நான் ஏன் இப்படிச் சாக்கடைப் புழுவாய் மாறினேன்? நாட்டுப்பற்றா? மதவெறியா? இல்லை மொழிவெறியா?’

எதுவுமே இல்லை! குடும்பத்தின் வறுமைதான் அவனை இராணுவத்தில் தொழில் புரிய இழுத்துவந்தது என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்குப் பள்ளிப் படிப்பு அதிகம் வரவில்லை. அவனது கட்டுமஸ்தான உடம்பிற்கு இந்தத் தொழில் ஒன்றுதான் அந்த நேரம் ஏற்றதாக இருந்தது. எனவேதான் வேறுவழியில்லாமல் இராணுவத்தில் சேர்ந்தான்.

அவன் இராணுவத்தில் சேர்ந்த காலத்தில் தினமும் பயிற்சி செய்வது, சாப்பிடுவது, தூங்குவது போன்றவைதான் இராணுவத்தின் தொழிலாக இருந்தது. எப்போதாவது எங்கேயாவது மழை வெள்ளமென்றால் அங்கே போய் மக்களுக்கு உதவி செய்வார்கள். அவ்வளவுதான். எந்த ஒரு லட்சியமும் இல்லாமல் இப்படித்தான் அவனது இராணுவ வாழ்க்கை ஆரம்பமானது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் நாட்டில் நடைபெற்ற இனக்கலவரம் அவனால் மறக்க முடியாத ஒரு சம்பவமாகிவிட்டது. தமிழரின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப்பட்டபோது வீதிக்காவல் கடமையில் அவன் நின்றிருக்கிறான்.

கொள்ளை அடித்தவர்கள் தனது இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவற்றைக் கண்டும் காணாதது போல அவன் இருந்திருக்கிறான்.

அன்றுதான் முதன்முதலாக அவனும் இப்படியான அநியாயத்திற்குத் துணை போனான். அப்புறம் எத்தனையோ தடவைகள் இப்படியான அநியாயங்கள் நடக்கும் போதெல்லாம் தவறு என்று தெரிந்தும் வாய்மூடி மௌனமாய் இருந்திருக்கிறான்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இவையெல்லாம் மனிதனின் அழிவிற்காக ஏற்பட்ட ஆசைகள்தான் என்பது அவனுக்குத் தெரியும். மாற்றான் வீட்டு மண்ணை ஆக்கிரமிக்க அரசு ஆசைப்பட்டபோது சேவை காரணமாக மறுக்க முடியாமல் அவனும் அங்கே கடமைக்குப் போனான்.

ஆக்கிரமித்த நிலத்தில் கால் பதித்த கட்டுப்பாடற்ற இராணுவம் தான்தோன்றித்தனமாய் அங்கே நடக்க முற்பட்டது. வறுமையில் வாடிய அப்பாவி மக்கள் துப்பாக்கி முனையில் பலவந்தமாய் அடக்கப்பட்டனர். காய்ந்து கிடந்த இளமைகள் அடங்காத ஆசைகளோடு பொன்னுக்கும், பெண்ணுக்கும் ஆசைப்பட்டு அலைந்தன. ஆகமொத்தமாக தீராத ஆசைகளோடுதான் அந்த இராணுவம் அங்கே களம் புகுந்தது.

அன்று வீதிச் சோதனைக்காக உயர் அதிகாரியோடு அவனும் வேறு சிலரும் சென்ற போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. வீதிக்குக் குறுக்கே யாரோ கற்பாறை ஒன்றை நகர்த்தி இருந்தார்கள். பாதைத் தடை காரணமாக சந்தேகத்தின் பேரில் அருகே உள்ள வீடுகளைச் சோதனை போட்டார்கள்.

அப்போதுதான் மங்கிய வெளிச்சத்தில் ஜன்னல் வழியாக அவள் முகம் அங்கே தெரிந்தது. கட்டில் விளிம்பில் தலை குனிந்தபடி அவள் உட்கார்ந்திருந்தாள். பார்த்த மாத்திரத்திலேயே அவளிடம் ஒரு கவர்ச்சி தெரிந்தது. அந்த அழகை அவளுக்குத் தெரியாமல் வெளியே நின்றபடி அவன் ரசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென வாசற் கதவை உதைத்துக் கொண்டு உயரதிகாரி உள்ளே நுழைவதையும் அவள் பயத்தோடு திடுக்கிட்டு எழுந்து நிற்பதையும் அவனால் பார்க்க முடிந்தது. அவள் மடியில் இருந்த குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள்.

அவன் நல்ல நோக்கத்தோடு உள்ளே வரவில்லை என்பதை அவனது பார்வையில் இருந்தே அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவசரமாக முந்தானையை இழுத்து திறந்த மார்பை மறைக்க முயற்சி செய்தாள். அவள் இருந்த கோலமும் தனிமையும் உயரதிகாரியை வெறி கொள்ளச் செய்திருக்க வேண்டும். அவளைப் பிடித்திழுத்து மூர்க்கத் தனமாய் கட்டிலில் உயரதிகாரி தள்ளிய போதுதான் ‘மது குடித்தால் தான் வெறிக்கும் மாது பார்த்தாலே வெறிக்கும்’ என்று அந்த உயரதிகாரி அடிக்கடி சொல்வது அவனுக்கு நினைவிற்கு வந்தது.

‘அம்மா’ என்று அவள் அப்போது எழுப்பிய அந்த அவலக் குரல் கூட குழந்தையின் அழுகைக்குள் புதைந்து போயிற்று.

உயரதிகாரி காரியம் முடிந்து வெளியேறியதும் அவன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். அவள் கசக்கப்பட்ட மலராய் அலங்கோலமாய் கட்டிலில் மயங்கிக் கிடந்தாள். மார்பகம் நனைந்திருந்தது. பால்வடிந்த வாயோடு பச்சைக் குழந்தை தரையில் வீரிட்டுக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் சகிக்க முடியாமல் கண்களை மூடிக் கொண்டவன் ‘லெட்ஸ் கோ’ என்ற உயரதிகாரியின் கட்டளைக்குப் பணிய வேண்டிவந்தது. ஆனாலும் கடமையின் நிமிர்த்தம் அவன் மீண்டும் மௌனம் காத்தான்.

அந்தத் தாய் அன்று போட்ட சாபமோ என்னவோ ஆனையிறவுச் சமரின்போது அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருந்த முகாம் முற்றுகை இடப்பட்டது. அவர்கள் தண்ணீரில்லாமல் நாவறண்டு உயிருக்குப் போராடியதும் முகாமை விட்டுத் தப்பிப் பின்பக்கமாய் ஓடும்போது தாங்களே முகாமின் பாதுகாப்பிற்காக புதைத்து வைத்த கண்ணி வெடியில் சிக்கி உயரதிகாரி பலியானதும், அவனது கால் ஊனமானதும் அவனால் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

முகாமை விட்டுத் தப்பி ஓடும் போதுதான் மரணம் அவனைப் பின்னால் துரத்துவது அவனுக்குப் புரிந்தது. இந்த உலகில் வாழப்போவது சிறிது காலம்தான் என்று அவனுக்குத் தெரிந்த அடுத்த நிமிடமே மரணபயமும் அவனைப் பிடித்துக் கொண்டது. அதுகூட அவனது ஒரு கால் கண்ணிவெடியில் சிக்கி ஊனமுற்ற போது தான் அப்படி அவனுக்குச் சிந்திக்கத் தோன்றியது. காலின் வலியைவிட மனசுதான் அதிகம் வலித்தது.

இந்தக் குறுகிய காலத்திற்குள் மொழி வேற்றுமை, மதவேற்றுமை, ஜாதி வேற்றுமை போன்ற பலவிதமான வேற்றுமைகளை அவன் சந்தித்து இருக்கிறான். இவ்வேற்றுமை உணர்வுகள் தானே மனிதனை மிருகமாக்கி ரத்த வெறிபிடித்து அவர்களை அலைய வைக்கிறது.

வேண்டாம், வேற்றுமை ஒன்றுமே வேண்டாம்! இப்போதைக்கு அன்பு என்கிற இயற்கையின் மொழியைப் புரிந்து கொண்டாலே அவனுக்குப் போதும் போல இருந்தது!

‘அன்பு’ என்றதும் அவனது உடம்பு சிலிர்த்துக் கொண்டது. அன்பாலே முடியாதது ஒன்றுமில்லை. அது ஓர் இன்ப ஊற்று. என்றுமே வற்றாத ஒரு ஜீவநதி. போதிமரத்தின் கீழ் உட்காராமலே அவனுக்கு சிறிது சிறிதாக ஞானம் பிறந்தது.

இராணுவத்திடம் இருந்து வந்த ‘விரும்பினால் மறுபடியும் சேவைக்கு வரலாம்’ என்ற அழைப்புக் கடிதம் அவனை மீண்டும் சிந்திக்க வைத்தது. யுத்தம் என்ற போர்வையில் ஒன்றுமே அறியாத அப்பாவிகளின் உயிரைப் பலி எடுக்கவா இந்த அழைப்பு?

சின்ன வயதில் படித்த யுத்த வெறி பிடித்த அசோகச் சக்கரவர்த்தியின் சரித்திரம் கண் முன்னால் விரிந்து நின்றது. புத்தபிரானும் பிறப்பால் ஒரு இந்து தானே! அவர் புனித பூமியில் அவதரிக்காவிட்டால் நானும் ஓர் இந்துவாக இருந்திருப்பேனோ?

அன்று அந்தப் பெண் ‘அம்மா’ என்று கத்தாமல் ‘அம்மே’ என்று எனது மொழியில் அவலக்குரல் எழுப்பி இருந்தால் உதவிக்கு ஓடியிருப்பேனோ? ஒருவேளை ஊமையாகப் பிறந்திருந்தால் நான் என்ன மொழி பேசியிருப்பேன்? மொழி எல்லாம் ஊமையானால்? அவனது சிந்தனைகள் விரிந்துகொண்டே போகக் கலங்கிக் கிடந்த மனம் தெளிவானது.

அவன் தனது இராணுவ உடையைக் களைந்து விட்டுக் காவி உடை அணிந்து கொண்டான.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

Sam Surendran
Mortgage Broker
LICENCE # M16002312
647-922-5704
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 626

# ரொறொன்ரோ பெரும்பாக ஆதன வியாபாரம் - மார்ச் 2023




கடந்த ஒரு வருடமாக மந்தநிலையிலும் உறங்கு நிலையிலும் இருந்த ஆதன வியாபாரம் இப்பொழுது சிறிது மாற்றம் அடைவதனைக் காணக்கூடியதாக உள்ளது.



இன்றைய காலகட்டத்தில் ரொறொன்ரோ விலும் அதன் அண்மைய பகுதியிலும் ஒரு மில்லியன் டொலர் ($1 மில்லியன்) என்பது தனிவீடுகளின் ஆரம்ப விலையாகக் காணப்படுகின்றது. மார்ச் 2022ஆம் ஆண்டிற்கு முன்னர் எவ்வாறு காணப்பட்டதோ அதேபோன்றதொரு நிலைமையே இன்றும் காணப்படுகின்றது.

அதாவது, ஓர் ஆதனத்தை சந்தைப் படுத்திய பின்பாக, ஆதனத்தை வாங்க விரும்புவோர் ஒரு குறிப்பிட்ட திகதிவரை பொறுத்திருந்து அதற்குரிய விலையை கொடுத்தல் வேண்டும். (Offer Submitting Date). இப்பொழுது ஒரு குறிப்பிட்ட ஆதனத்திற்குக் குறைந்தது பத்திற்கு (10) மேற்பட்டோர் தமது வாங்கும் பத்திரத்தை (Agreement of Purchase and Slae) சமர்ப்பிப்பதனைக் காணலாம்.

இதற்கு முக்கிய காரணம், போதியளவு ஆதனங்கள் சந்தைப்படுத்தப்படாமல் இருப்பதாகும். இவ்வாறான போட்டி நிலைமை குறிப்பாக ஆதன விலை $999,000இற்கும் $1,299,000 இடையில் சந்தைப்படுத்தப்படும் ஆதனத்திற்கே காணப்படுகின்றது.

இப்பொழுது இருபகுதியும் ஓரளவு தமது நிலைப்பாட்டை மாற்றியுள்ளனர். இன்றும் அநேகமாக வீடு வாங்குபவர்கள் ஆதனத்தை வாங்குவதற்கு அடமானக் கடன் பெறும் உத்தரவாதத்தை (Financing Condition) விற்பவரிடம் பெற்றுக்கொண்டே, ஆதனத்தை வாங்கு வதனைக் காணலாம். (Conditional offer)

இன்றைய நிலைமையில் ஆதனம் விலை குறைவதாலும் புதிதாக அதிக மக்களின் வருகை, தொழில் புரிபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு, கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தின் அதிகரிப்பில் புதிதாக பெரிய மாற்றம் ஏற்படாது என்ற நிலைப்பாடும் நீண்ட காலத்தில் ஆதன வியாபாரமும் விலை யிலும் அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

இன்றைய காலத்தில், ஆதன விலையில் பெறுமதி கூடிய ஆதனங்கள் ($5 மில்லியனிற்கு மேற்பட்ட ஆதனங்கள்) விற்பதில் நெருக்கடி காணப்படுகின்றது. அடமானக்கடனின் அதிகரிப்பும் இதற்கு முக்கிய காரணமாகலாம். குறிப்பிட்ட கனடியர்களே இவ்வாறான ஆதனத்தை வாங்குகின்றனர்.

**DECEMBER 2022 HOUSING MARKET BY REGION**

| | TORONTO | YORK | DURHAM | PEEL | HALTON |
|---|---|---|---|---|---|
| Average Sales Price: | **$1,017,989** | **$1,267,563** | **$874,456** | **$989,873** | **$1,188,341** |
| Total # New Listings | 1,510 | 743 | 458 | 808 | 384 |
| Total # Sales | 1,162 | 575 | 380 | 578 | 305 |
| Avg. Listing Days On Market (LDOM) | 28 | 25 | 21 | 26 | 32 |
| YTD Increase | **8%** | **8%** | **11%** | **11%** | **9%** |
| **HOUSE TYPES & AVERAGE SALE PRICE** | | | | | |
| Detached | $1,627,635 | $1,644,681 | $972,440 | $1,275,095 | $1,502,129 |
| Semi-Detached | $1,152,073 | $1,040,229 | $752,370 | $929,411 | $1,026,763 |
| Townhouse | $1,076,226 | $1,094,779 | $804,493 | $883,837 | $934,298 |
| Condo Apt | $741,584 | $675,100 | $534,788 | $593,606 | $677,230 |

**Prepared By: Sivage Sivagumaran BROKER CPA, CGA, GUILD™, ABR, SRES, SRS, RSPS |Source: TRREB Data As of,Jan./05/*2023***

அண்மையில் நீண்ட கால அடமானக் கடனின் (Long Term closed Mortgage Rate) வட்டி வீதத்தில் சிறிதளவு இறக்கம் ஏற்பட்டதும், விற்பவர்கள் (sellers) ஓரளவு யதார்த்தத் தன்மையை புரிந்ததும் காரணமாகலாம்.

ஒக்ரோபர் 2022இல் விற்பவர்களும், வாங்குபவர்களும் ஆதனவிலை முரண் பாட்டில் அதிகமாகக் காணப்பட்டனர். பெறுவதில் நெருக்கடி இருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். உதாரணமாக செப்ரெம்பரில் சந்தைப்படுத்தப்பட்ட பல ஆதனங்கள் (ரொறொன்ரோவிற்கு வெளியே) விற்கப்படாமல் சந்தையில் இருந்தன. இப்பொழுது விலை குறைக்கப் பட்டு சந்தைப்படுத்தப்படுவதால் கேட் பதனைவிட (Asking price) அதிக விலைக்கு (over asking price) விற்கப் படுவதனையும் காணலாம்.

கனடிய அளவில் சராசரி வீட்டு விலை மற்றும் ஆதனவியாபாரம், 2022 ஜனவரி யுடன் (January) ஒப்பிடும்போது 2023 ஜனவரியில் முறையே 18.3%, 37.4% இனால் இறங்கியுள்ளது.

விலை குறைவிற்கு முக்கிய காரணமாக குறைந்தளவு மக்களே ஆதனத்தை வாங்க இருந்ததாகவும் மற்றும் குறைந்தளவு ஆதனங்களே சந்தைப்படுத் தப்பட்டதனாலும் விற்கப்பட்ட ஆதனங் களும் குறைவாகக் காணப்பட்டதாகக் கொள்ளலாம். குறிப்பிட்ட காலத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் திரு. ரிவ் மெக்கலம் (Tiff Macklem)இன்



அண்மைய வட்டி வீதத்தின் மீதான அறிக்கை, மக்களுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.

மார்ச் 08, 2023 அன்று மத்திய வங்கியின் வட்டி வீதம் பற்றிய நிலைமை தெரியவரும். எனினும், வட்டி வீதம் மாறாது என்பதே இன்றைய கணிப்பாக உள்ளது. அவ்வாறான நிலைமை ஏற்பட்டால் 2023இன் இளவேனிற்கால ஆதன வியாபாரம் 2022இன் இளவேனிற்காலத்தில் ஏற்பட்ட ஆதன வியாபாரத்திற்கு எதிராகக் காணப்படலாம்.







# பிறர் பொருளில் நாட்டம் கொள்ளாதே -நாடும் நடப்பும்




பொருள் என்பது உழைப்பின் பயன். பிறர் பொருளில் நாட்டம்கொள்ளல் என்பது, தனக்கு உரியன அல்லாதனவற்றுக்கு ஆசைப்படுதல் என்பது பொருள். ஒருவர் மற்றவர் பொருளுக்கு ஆசைப்படுவது அல்லது விரும்புவது, நாட்டம் கொள்வது களவுக்குச் சமம். பணம், பொருள் என இந்த இரண்டுமே வாழ்க்கையில் மனிதனின் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் குணத்தையே மாற்றும் வல்லமை கொண்டது. பணமே மனிதனை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டதனால் ஏற்பட்ட ஆபத்தில் பிறர் பொருளில் நாட்டம் கொள்ளுதலும் ஒன்றாகும். இன்றைய காலத்தில் ஒவ்வொருவரும் எப்படியேனும் பொருள் ஈட்ட வேண்டும், சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்காக பிறர் பொருளில் நாட்டம் கொள்ளலாமா? பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை, என்பதனால்போலும் பொருளில் நாட்டம் அதிகரித்துள்ளது. பிறர் பொருளில் நாட்டம்கொண்டு அலைவோர் அங்கலாய்போர் அதிகம். எனினும் மனித வாழ்வியலின் கட்டமைப்பு கனதியானது, கருத்தானது. தனித்துவமான இயல்புகளாலும், செயற்பாடுகளாலும் பிணைக்கப்பட்டது. அந்தக் கட்டமைப்பின்வழி பயணிப்பதே சிறந்தது.




இன்னொருவரை அடியொற்றி வாழ முயற்சிக்கும்போதுதான் பிறர் பொருளில் நாட்டம் தூண்டப்படுகிறது. தான் தவறான பாதையில் செல்வதையே சரியான பாதை என கருதுவதால் அவர்களின் எதிர் காலமும் கேள்விக்குறியாகவே அமையும். மனிதம் தொலையக் காரணம், மனிதர்கள் மனிதத்துடன் வாழத் தவறிவிடுகின்றமையே. முன்னைய காலத்தைக் காட்டிலும் இன்று வாழ்க்கைப் பிரச்சினை சிக்கலுடையதாகி விட்டது என்பது கண்கூடு. புரியாமல் வாழ முற்பட்டால் வெறுமை மட்டும்தான் எஞ்சி நிற்கும். மனிதன் தான் புரியும் ஒவ்வொரு செயலுக்கும் சமூகம் சார்ந்த பெறுமானம் உண்டு என்பதைப் புரிந்து நடந்து கொண்டால் பிறர் பொருளில் நாட்டம் ஏற்படாது. எதிர்பார்ப்புக்களை அகலப் படுத்திக் கொள்ளக் கூடாது. பிறர் பொருள் நாட்டம் கூடாது. "ஆசை புத்தியை மறைக்கும். மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய் விடுகிறது" கவியரசன் கண்ணதாசன் கூற்று. பிறர் பொருளில் நாட்டம் கொள்ளல் தவறாக அவாக்கொள்ளல் ஆகும். "பேராசை மனித மனத்தை விசமாக்குகிறது" சார்லிசாப்ளின் கூற்று.

மனத்துக்கண் மாசற்ற ஒருவன் அறவழி இல்லாத பிற வழிகளிகளிலும் இன்பம் காணத் துடிக்கின்றனர். தன் கண் காணாவிடத்து பிறர் துன்பப்பட்டு ஈட்டிய பொருளை தன் சுகத்துக்கு பயன்படுத்து பவரும் உண்டு. பிறர் வழிகளால் வரும் இன்பம் இன்பமேயன்று என்பதும், இன்பம் போல் காட்சியளிப்பினும் முடிவில் அவை துன்பமாகவே முடியும். முடிகின்றது. நாட்டம் அதிகரிக்க அதிகரிக்க திருட்டுத் தனமும் அதிகரிக்கும். இது சமூகத்துக்கு பிறழ்வான ஒரு நிகழ்வாகும். இதை வள்ளுவர் அதிகாரம் 29இல் "உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்". அதாவது, அடுத்தவர் பொருளைத் திருடி எடுத்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பே தீயதாகும் என்கிறார். ஆசைப்பட்டு அடுத்தவரை வஞ்சித்து சேர்த்த பொருள் பயன் தராமல் அழிந்துபோய் துன்பமே சேரும் என்கிறார் வள்ளுவர். மேலும் "களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து ஆவது போலக் கெடும்". திருட்டுத் தனமாகப் பொருள் சேர்ப்பது செல்வம் வளர்வதைப்போல தோன்றினாலும் திடீரென்று இல்லாமல் போகும் என்கிறது வள்ளுவம்.

திருவள்ளுவரின் குறள் நெறிகள் மக்கள் மனங்களில் ஆட்சி செய்ய வேண்டும். வெஃகாமை எனும் அதிகாரத்தில் "நடுவுஇன்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்" அதாவது, அடுத்தவர் பொருளில் நாட்டம்கொண்டு அதனை மற்றவர்க்கு தெரியாமல் எடுத்துக்கொள்ள நினைப்பவனின் குடும்பமும் கெட்டொழியும். அது பெரிய குற்றமும் ஆகும். "படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் நடுவன்மை நாணுபவர்" நேர்மை தவறாமல் இருப்போர் தமக்கு நன்மையே வரும் என்றாலும் அடுத்தவர் பொருளில் நாட்டம்

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்...)

ஆயிரக்கணக்கான தாதியர்கள், மருத்துவர்கள் மற்றும் தனிநபர் பராமரிப்புப் பணியாளர்களை ஒன்ராறியோ தற்போது பணிக்கமர்த்தி வருகின்றது.

இந்தப் பராமரிப்புடன் இணைவதற்கு நாம் உங்களுக்கு உதவும் அனைத்து வழிகளையும் ontario.ca/YourHealth இல் பார்வையிடவும்

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# நானிலம் போற்றும் நட்பு - 16




"கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்" (அதிகாரம் நட்பாராய்தல், குறள் 796) என்ற குறளிற்கு "கேடு வந்த போதும் ஒருவகை நன்மை உண்டு, அக்கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டிஅளந்து பார்ப்பதொரு கோலாகும்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"துன்பம் வருவதில்கூட ஒரு நன்மை உண்டு. அது நண்பரின் நட்பை அளவிட்டுக் காட்டும் அளவு கோலாகும்" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"கெடுதி வந்தால், அப்பொழுது நட்பினரின் தன்மையை அளந்தறியலாம். ஆதலால் கெடுதியிலும் ஒரு நன்மை யுண்டு." என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

நமக்குத் துன்பம் வரும்பொழுது நண்பர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதை அவதானித்துக் கொள்வதின் மூலம் நல்ல நண்பர்களை அடையாளம் கண்டு கொள்ளலாம் என்பதை இந்தக் குறள் மூலம் அறிய முடிகிறது.

ஔவையார் ஆத்தி சூடி 19இல் "இணக்கம் அறிந்து இணங்கு" என்று கூறியுள்ளார். இதன் பொருள் ஒருவரிடம் நட்பு கொள்ளும் முன் அவர் நல்ல குணங்களும், நல்ல செய்கைகளும் கொண்டவரா எனத் தெரிந்த பிறகு அவருடன் நட்பு கொள்ளவும் என்பதாகும். ஔவையார் ஆத்தி சூடி 37 இல் "கூடிப் பிரியேல்" என்று கூறியுள்ளார். இதன் பொருள் நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை பிரியாதே என்பதாகும்.


ஔவையார் ஆத்தி சூடி 51இல் "சேரிடமறிந்து சேர்-நீ" என்று கூறியுள்ளார். இதன் பொருள் பழகும் நபர்கள் நல்ல குணங்கள் உடையவர்களா என நன்கு ஆராய்ந்து பின்பு அவர்களுடன் பழகு என்பதாகும்.

ஔவையார் கொன்றை வேந்தன் 47 இல் "தோழனோடும் ஏழைமை பேசேல்" என்று கூறியுள்ளார். இதன் பொருள் நெருங்கிய நண்பனிடத்தும் தம் வறுமை பற்றிப் பேசக் கூடாது என்பதாகும்.

ஔவையார் கொன்றை வேந்தன் 48இல் "நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்" என்று கூறியுள்ளார். இதன் பொருள் நல்லோர் நட்பு இல்லாமல் போனால் வாழ்வில் துன்பம் ஏற்படும் என்பதாகும்.

ஔவையார் மூதுரை பாடல் 5இல்
"அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்." என்று கூறியுள்ளார். இதன் பொருள் நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு என்பதாகும்.

ஔவையார் மூதுரை பாடல் 9இல்
"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே- நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று." என்று கூறியுள்ளார். இதன் பொருள் நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது என்பதாகும். இந்தப் பாடலில்




கொடுக்கப்பட்ட அறிவுரை நட்புக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

ஔவையார் மூதுரை பாடல் 10இல்
"தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே-தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது." என்று கூறியுள்ளார். இதன் பொருள் தீயவர்களைப் பார்ப்பதும், பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே என்பதாகும். இந்தப் பாடலில் கொடுக்கப்பட்ட அறிவுரை நட்புக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

ஔவையார் மூதுரை பாடல் 18இல்
"அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு." என்று கூறியுள்ளார். இதன் பொருள் குளத்தில் நீர் வற்றிய உடன் விலகிச் செல்லும் பறவைகள் போல, நமக்குத் துன்பம் வந்தபோது நம்மை விட்டு விலகிச் செல்பவர்கள் உறவினர் அல்லர். அந்தக் குளத்திலேயே அப்போதும் சேர்ந்து வாடும் கொட்டி, அல்லி, நெய்தல் கொடிகளைப் போல, நம்முடனேயே நம் துன்பங்களையும் பகிர்ந்து கொள்பவர்களே நம் உறவு என்பதாகும். இந்தப் பாடலில் கொடுக்கப்பட்ட அறிவுரை நட்பு என்ற உறவுக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

ஔவையார் மூதுரை பாடல் 21இல்
"உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி-உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்துபோல் வாரும் உண்டு." என்று கூறியுள்ளார். இதன் பொருள் வியாதி நம்முடனேயே பிறந்து நம்மைக் கொன்று விடுகிறது. எனவே உடன் பிறந்தோர் எல்லாரையும் நம் உறவு என்று நினைக்க முடியாது. உடன் பிறக்காது எங்கோ பெரிய மலையில் இருக்கும் மருந்து நம் வியாதியைத் தீர்ப்பது போல, அன்னியரும் நமக்கு நன்மை தருபவராக இருக்கக் கூடும். இந்தப் பாடலில் கொடுக்கப்பட்ட அறிவுரை நட்பு என்ற உறவுக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.


சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல் களைக் கொண்டது. இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது. இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலில் 34 தலைப்புகளின் கீழ் பாடல்கள் அமைந்துள்ளன. இதில் 41ஆவது பகைவரைச் சூழ்ச்சியால் அழித்தல் என்ற தலைப்பின் கீழ் உள்ள இரண்டாவது பாடலைக் கவனிப்போம்.

"மாற்றத்தை மாற்றம் உடைத்தலால் மற்றவர்க்(கு)
ஆற்றும் பகையால் அவர்களைய - வேண்டுமே
வேற்றுமை யார்க்குமுண் டாகலான் "ஆற்றுவான்
நூற்றுவரைக் கொன்று விடும்."

இந்தப் பாடலுக்கு உரையாசிரியர்: புலியூர்க் கேசிகன் "பகைவரிடத்து ஒட்டி நண்பரைப் போல நடந்து, அவரை அழிக்க வல்லவர்களைப் பெற்றால், எத்தகைய பெரும் பகையையும் எளிதில் வென்று விடலாம். "ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்று விடும்" என்று உரை கூறியுள்ளார்.

இந்தப் பாடலில் சூழ்ச்சி செய்வதற்கும் நண்பரால்தான் முடியும் என்ற கருத்து வருகின்றது. பாடல் சொல்ல வந்த பொருள் வேறாக இருந்தாலும் நட்பில் கவனம் தேவை என்ற பொருளைச் சொல்லாமல் சொல்லுகிறது என்பதை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நீதி நூல்கள் பலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளை ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)



# ஓ. பன்னீர்செல்வம் வீழ்ச்சிக்கு பாஜக நட்புதான் காரணம்!

## நேர்காணல் - ஜென்ராம் நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாடு அரசியல் களம் மீண்டும் ஒரு முக்கிய திருப்பத்தை சந்தித்துள்ளது. தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்றான அதிமுக, ஜெயலலிதாவுக்கு பின்னர் மீண்டும் ஒற்றைத் தலைமையின் கீழ் வந்துள்ளது. அக்கட்சியின் இடைக் காலப் பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிச்சாமி தேர்வு செய்யப்பட்ட பொதுக் குழு கூட்டம் செல்லும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஓ. பன்னீர்செல்வம் உட்பட அவரது ஆதரவாளர்கள் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டது செல்லும் என்றும் ஆகியிருக்கிறது. இது அதிமுக கட்சிக் குள்ளும் தமிழ்நாடு அரசியலிலும் என்ன விதமான தாக்கத்தை ஏற்படுத்தும். இது தொடர்பாக தமிழக மூத்த பத்திரிகையாளர் ஜென்ராம் அளித்த பேட்டி இது.

**இந்த தீர்ப்பை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

ஓ. பன்னீர்செல்வத்துக்கு அதிமுக கட்சிக் குள்ளும் கட்சி நிர்வாகிகள் மட்டத்திலும் செல்வாக்கு இல்லாமல் இருந்தாலும் அவருக்கு தேவையானவை டில்லி மூலமாக நடந்துகொண்டே இருந்தது. இந்தமுறை அந்த எல்லா வழிகளையும் எடப்பாடி பழனிசாமி அடைக்கத் தொடங்கிவிட்டார். எனவே, தீர்ப்பு இப்படித்தான் வரும் என்பது நான் எதிர்பார்த்ததுதான்.



**எடப்பாடி பழனிசாமியின் வளர்ச்சி, ஓ. பன்னீர்செல்வத்தின் வீழ்ச்சி _ உங்கள் பார்வையில் இவை இரண்டுக்குமான காரணங்கள் என்ன?**

எடப்பாடி பழனிசாமியின் கவனம் ஆரம்பத்தில் இருந்தே கட்சிக்குள் நிர்வாகிகளை வென்றெடுப்பதில் குவிந்திருந்தது. கட்சியில் முதன்மை பதவி ஓ. பன்னீர்செல்வத்திடம் இருந்தாலும் ஆட்சியில் முதன்மை பதவி எடப்பாடி பழனிசாமியிடமே இருந்தது. எனவே, அதனை பயன்படுத்தி, நிர்வாகிகள் மகிழ்ச்சியாக இருக்கும்படி அவர் பார்த்துக் கொண்டார். இதனால் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற போட்டியிலும் தொடர்ந்து எதிர்கட்சி தலைவர் போட்டியிலும் அவர் வெற்றிபெற்றார்.

அதேநேரம், ஓ. பன்னீர்செல்வம் கட்சி நிர்வாகிகளையும் தொண்டர்களையும் வென்றெடுப்பது தொடர்பாக எதுவுமே செய்யவில்லை. முழுக்க முழுக்க பாஜக வுடன் 'அட்ஜெஸ்ட்' செய்து போவதில், அதன்மூலமாக பலன்கள் பெறுவதில்தான் அவருடைய கவனங்கள் குவிக்கப்பட் டிருந்தது. ஆட்சியில் இரண்டாம் இடத்தில் இருந்ததால், நிர்வாகிகளின் தேவைகளை நிறைவேற்றும் அதிகாரம் ஓபிஎஸ்ஸுக்கு இல்லை என்பதும் இதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால், அதற்கு முன்பே, ஜெயலலிதா மரணத்துக்கு பின்னர், அடுத்த தலைமை யார் என்ற கேள்வி தொடங்கிய புள்ளியில் இருந்து ஒவ்வொரு கட்டத்திலும் ஓ. பன்னீர்செல்வம் செல்வாக்கு குறைந்தவராகவே இருப்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. அவருடைய தர்மயுத்தம் கூட கட்சிக்கு வெளியில் இருந்து தூண்டிவிடப்பட்டுதான் நடந்தது.

**ஓ. பன்னீர்செல்வம் அதிகமாக பாஜகவை சார்ந்திருந்ததும் அவரது வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருந்திருக்குமா?**

தேர்தல் கூட்டணிக்காக பாஜகவை சார்ந்திருப்பது வேறு, அதிமுக கட்சிக்குள் உள்ள பிரச்சினைகளுக்கான தீர்வு களுக்கு பாஜகவை சார்ந்திருப்பது வேறு. இதில் இரண்டாம் நிலைக்கு கட்சியை கொண்டு செல்கிறார் என்பதுதான் அதிமுக தொண்டர்களும் நிர்வாகிகளும் ஓ. பன்னீர்செல்வம் மேல் வருத்தப்படு வதற்கான காரணம். பொன்னையன் பேச்சும் எடப்பாடி பழனிசாமியின் கடைசி உறுதியான நிலையும் அதைத்தான் காட்டுகிறது.

**இனி ஓ. பன்னீர்செல்வத்தின் நிலை என்னவாகும்?**

அவருக்கு இன்னும் ஒரு நம்பிக்கை உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)





மகுடம்
MAHUDAM 2023
KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
ESTD 1994
2300 PHARMACY AVE,
SCARBOROUGH, ON M1W 1H8
MARCH 25TH SATURDAY
2023
5:00PM
மாபெரும் இன்னிசை, நடன நிகழ்வு
Singers
Punya
Mahisha
Hariharasudhan
Ananthan
DANCE PERFORMER'S
Irudaya Dance Company
Abinayalaya Natyalayam &
Sri Abiramy Dance Academy
Mega Tunes
MC
Prasanth
&
Sai Janani
KOKUVIL HINDU COLLEGE OSA CANADA
Tickets are available Contact:
Ravi Kana - 416 725 7284, Maithily- 416 388 3935
Nageswaran - 647 609 5392




### நீண்ட தூர நெடுஞ்சாலை AZ டிரைவர் தேவை !!

அணிகள் மட்டும்**
பாதைகள் NB-ON-US-ON*
பாதைகள் US மத்திய மேற்கு & கிழக்கு கடற்பரப்பு
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 கையொப்பம் போனஸ்*
- ✓ $500 பரிந்துரை போனஸ்*
- ✓ அனுபவத்தைப் பொறுத்து ஒரு மைலுக்கு $0.70 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ 6-8 நாட்கள் வெளியே தங்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ குறைந்தபட்ச வாராந்திர ஊதியம் $2200 முதல் $2500 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ தானியங்கி டிரக் புதிய மாடல்கள்; Freighliner & Volvo
- ✓ பிரத்யேக பாதைகள்.
- ✓ உங்கள் அரை மாத வருமானத்தை நாங்கள் நேரடியாக உங்கள் வங்கியில் டெபாசிட் செய்கிறோம்.

**குறைந்தபட்ச தேவைகள்:**

- ✓ AZ உரிமம் தேவை
- ✓ 6 மாதங்கள் சரிபார்க்கக்கூடிய அனுபவம்
- ✓ ஓட்டுநர் சுருக்கம்
- ✓ அமெரிக்கா விசா
- ✓ மருந்து சோதனை

**வேலை வகைகள்**: முழுநேரம், நிரந்தரம்

**சம்பளம்:** வாரத்திற்கு $2,200.00-$2,500.00 வரை சம்பாதிக்கலாம்.

**பலன்கள்:**

- ✓ பல மொழி Dispatch ஆதரவு கிடைக்கிறது: தமிழ், ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி.
- ✓ மருத்துவ காப்பீட்டுத் திட்டங்கள்.
- ✓ சாதாரண உடை.
- ✓ ஆன்-சைட் பார்க்கிங்.
- ✓ கூடுதல் ஊதிய வகைகள்.
- ✓ பாதுகாப்பு போனஸ் ஊதியம்.

**முகவரி:** 39 Manstor Rd, Etobicoke, ON M9C 1B1

நீங்கள் அழைக்கலாம்; Jay-647-222-6969 (அ) Shivek 902-316-2392
(அ) Samuel (Sam) 902-932-7076 EXT#101
**Email:** safety@businessporters.com

### AZ HIGHWAY DRIVER WANTED !!

TEAMS ONLY**
Lanes NB-ON-US-ON*
Lanes US Midwest & Eastern Seaboard
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 Signing Bonus*
- ✓ $500 Referral Bonus*
- ✓ Paying up to 0.70 per mile depending on the experience.
- ✓ Applicants willing to stay 6-8 days out will be given preference.
- ✓ Minimum weekly pay $2200 to $2500.
- ✓ Automatic truck Newer models; Freightliners & Volvos.
- ✓ Dedicated Shipments.
- ✓ Semi Monthly payments; Direct deposits to your Bank.

**MINIMUM REQUIREMENTS:**

- ✓ AZ License Required
- ✓ 6 Months Verifiable Experience
- ✓ Abstract
- ✓ US VISA
- ✓ Drug Test

**Job Type:** Full-time, Permanent

